IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.226/2018
DEPOSITION OF WITNESS (PW2)

வா.சா. 2 சாட்சி தேசிங்குராஜன் த.பெ.பெரியகருப்பத்தேவர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 01.10.2024 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் வாதிக்கு உறவினரா என்றால் இல்லை. வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது வீட்டிற்கு மேற்கே வாதி குடியிருந்து வருகிறார். தாவா வழக்குச் சொத்திற்கு எந்த திசையில் நான் குடியிருக்கிறேன் என்றால் கிழக்கே நான் குடியிருக்கிறேன். பஞ்சம்மாள் என்பவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. வழக்குச் சொத்திற்கு கிழக்கே பஞ்சம்மாள் வீடு என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

2. வழக்குச் சொத்து எந்த சர்வே எண்ணுக்கு கட்டுப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து வாதி பெயரில் இருப்பதற்கு ஆதரவான ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா வழக்கின் பிரதிவாதி பாண்டியை தெரியுமா என்றால் தெரியும். அவர் திருமங்கலம், நகர கூட்டுறவு வங்கியில் வேலை பார்த்து வருகிறார்.

3. மேற்படி பிரதிவாதி பாண்டிக்கு சகோதரர் பாண்டி என்பவர் உள்ளாரா என்றால் உள்ளார். மேற்படி நபர்களின் அண்ணனை பெரிய பாண்டி என்றும், தம்பியை சின்னபாண்டி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி பாண்டியில் பிரதிவாதி யார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பிரதிவாதி வாதியிடம் வழக்குச் சொத்தை கிரையம் கேட்ட விபரம் தெரியுமா என்றால் சின்னப்பாண்டி என்பவர் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பாக கிரையம் கேட்டார். கிரையம் பேசும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை, சண்டை சத்தம் கேட்டுதான் சென்றேன். என்முன்னிலையில் கிரையம் பேசவில்லை.

4. வழக்குச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றும், பிரதிவாதி சொத்தை வாதி ஆக்கிரமித்துள்ளார் என்றும் அதுகுறித்து தகுந்த பரிகாரம் பிரதிவாதி எதிர்கோரிக்கை மூலம் கேட்டுள்ளார் என்றும், அந்த விபரம் தெரிந்தும் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மை விபரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.